செய்தி வெளியீடு எண்:113 நாள்: 24.02.2017

# செய்தி வெளியீடு

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் “எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்” என்ற தாரக மந்திரத்தை நோக்கி மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான வீட்டு வசதியை ஏழை எளியோர் பெற்றிடும் வகையில் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

சென்னை மற்றும் பிற நகரங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் தனிவீடுகள் ஆகியவற்றை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் கட்டி வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில், பல்வேறு திட்டங்களின் கீழ் 59,023 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் கட்டியுள்ளது.

இந்த ஆண்டு, குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் சென்னை மற்றும் பிற நகரங்களில் ரூ.1,800 கோடி செலவில் 50,000 குடியிருப்புகள், அதாவது, பயனாளிகள் தங்கள் இடங்களில் வீடுகள் கட்டும் வகையில் 45,000 வீடுகளுக்கும்,

5,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கும் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

தனி வீடு ஒவ்வொன்றும் 300 சதுர அடி தரைப் பரப்பளவில் பயனாளிகள் தாங்களாகவே கட்டிக் கொள்ள வழிவகை செய்யப்படும். தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், தேவையான தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்கும். ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.2,10,000/– வீதம் மொத்தம் ரூ.945 கோடி மானியம் வழங்கப்படும்.

அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஒவ்வொன்றும் 400 சதுர அடி கட்டடப் பரப்பில் ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையலறை, பால்கனி, குளியலறை மற்றும் கழிவறை ஆகியவற்றை கொண்டதாக அமையும். இவ்வீடுகள் அனைத்திற்கும் மின்வசதி மற்றும் குடிநீர் வசதியும் செய்து கொடுக்கப்படுகிறது.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**